(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 54.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, நவெம்பர் 29, திங்கட்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0376/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பால்மா, எரிவாயு, சீனி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பெற்றோலியம் ஆகிய இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கவரி மற்றும் ஏனைய சகல விதமான வரிகளையும்,

(ii) கடந்த 10 வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பொருட்களின் அளவையும்,

(iii) கடந்த 5 வருடங்களாக வரி விதிப்பின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்,

(iv) மேற்படி பொருட்களில் ஏதாவது கடந்த 5 வருடங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் அவற்றின் அளவை வருடாந்த அடிப்படையிலும்,

(v) கடந்த 5 வருடங்களுக்கான மேற்படி பொருட்களின் வருடாந்த நுகர்வையும்

தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0506/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில். அம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் நிர்மாணித்துள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி வீடுகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

(iii) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீடமைப்புச் செயற்பாடு போதுமானதாக உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0619/ ‘10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திக்வெல்ல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குரிய பதிகம கிராமத்தின் நடுப்பகுதியில் சுடலையொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிர்மாண நடவடிக்கையை நிறுத்தி மக்கள் வசிக்காத வேறொரு இடத்தில் இதனை நிர்மாணிப்பதற்கு உள்ளூராட்சி, மாகாண சபைகள் ஆலோசனைக் குழுவினால் இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி அறிவித்தலுக்கேற்ப சம்பந்தப்பட்ட பிரதேச சபைத் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) இல்லையெனில், இந்த சீருயர் சபையின் தீர்மானங்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் இப்பிரதேச சபைத் தலைவர் இக்கௌரவ சபையை பொருட்படுத்தாத விதத்தில் தனது தற்றுணிபிற்கேற்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்,

(iv) ஆமெனில், இவ்விடயத்தில் இவருக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

(v) மேற்படி நிர்மாணிப்பை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0624/ ‘10

4.

கௌரவ ஆர். யோகராஜன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு 12, ஹுசைனியா வீதி, இலக்கம் 45 இல் அமைந்துள்ள ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மொழி மூல ஆசிரிய ஆளணியை பாடவாரியாகவும்,

(ii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(iii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போது காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும்,

(v) அந்நடவடிக்கைகள் எப்போது மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) ரோயல், ஆனந்த மற்றும் நாளந்த ஆகிய கல்லூரிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படுகின்ற ஆசிரியர்களது எண்ணிக்கையை போதனா மொழி ரீதியாகவும் பாடவாரியாகவும் யாதென்பதையும்,

(ii) ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக மேலதிக ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0680/ '10

5.

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மயிலிட்டியைச் சேர்ந்த 450 மீனவக் குடும்பங்கள் 1990 ஆம் ஆண்டிலிருந்து மருதனாமடத்திலுள்ள வாழ்வகத்தில் தற்காலிக வீடுகளில் தங்கியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இம்மீனவக் குடும்பங்கள் மயிலிட்டிக்குச் சென்று மீளக் குடியமர்வதற்கு எப்போது அனுமதிக்கப்படுவார்கள் என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0708/ '10

6.

கௌரவ துனேஷ் கங்கந்த,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஓகத்து மாதம் வரையிலான காலப்பகுதியில் கொரிய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு நபரொருவர் பின்பற்ற வேண்டிய செயல் நடைமுறைகள் யாவையென்பதையும்,

(iii) அத்தொழில்களுக்காக சென்ற ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வோறக எவ்வளவென்பதையும்,

(iv) கொரிய தொழில் வாய்ப்புக்காக இருக்க வேண்டிய அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள கொரிய தொழில்வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவரின் பதிவு செல்லுபடியாகும் கால எல்லை யாதென்பதையும்,

(ii) மேற்படி பதிவு இரத்தான தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவர் கொரியாவில் தொழிலொன்றை பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவையென்பதையும்,

(iii) எதிர்காலத்தில் இதற்காக ஆட்களை தெரிவு செய்யும் போது ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0731/ '10

7.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் வகுப்பு, IIஆம் தரத்திற்கான, வரி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 2006 ஆம் ஆண்டில் நடைபெற்றது என்பதையும்,

(ii) மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 16,000 விண்ணப்பதாரிகளில் ஏறத்தாழ 1,000 போர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்,

(iii) இவர்களில் 550 பேருக்கு, 2007 ஆம் ஆண்டு ஏப்பிரல் 01 ஆம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டது என்பதையும்,

(iv) மேற்படி நியமனம் பெற்றவர்களிடையே, இப்பரீட்சை தொடர்பாக, 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று பட்டப்படிப்புச் சான்றிதழைக் கொண்டிராதவர்களும் உள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வரி உத்தியோகத்தர்களுக்காக நியமனம் பெற்ற மேற்படி ஒவ்வொரு வேட்பாளரினதும் பெயர், விலாசம் மற்றும் பெற்ற புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) 2006.12.08 ஆம் திகதி முற்பகல் 9.30 க்கு, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய, ஜா - எல கிழக்கு, துடல்ல, 76/சீ எனும் இலக்கத்தில் வசிக்கும், திருமதி டபிள்யு.ஏ.எஸ்.எம். சொவிஸ் இப்பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0380/ '10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதி மன்றம், மேல் நீதி மன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றில் சேவையாற்றுகின்ற சகல நீதிபதிகளினதும் பெயர்களையும் பிறந்த திகதிகளையும்,

(ii) தற்போதைய பதவியில் அவர்களின் தகுதிகள் மற்றும் அனுபவத்தினையும்,

(iii) உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்பட்ட சகல பிரிவுகளையும் சார்ந்த நீதிபதிகளின் எண்ணிக்கையையும்,

(iv) சகல நீதிபதிகளுக்கும் ஏன் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்படவில்லை என்பதையும்,

(v) அவர்களுக்கு வாசஸ்தலம் கொடுக்கப்படவில்லையெனின், வீட்டிற்கெனக் கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், செலுத்தப்பட்ட தொகையினையும் கொடுப்பனவு எவ்வளவு காலமாக வழங்கப்படுகின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0507/ '10

9.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதைய தொழிலின்மை வீதம் யாதென்பதையும்,

(ii) தொழிலின்மையால் பாதிக்கப்பட்டுள்ளோரின் சதவீதத்தினைக் குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாதென்பதையும்,

(iii) மேற்படி செயற்பாட்டுக்காக, அரசாங்கம் செலவழித்துள்ள பணத்தொகை யாதென்பதையும்.

(iv) அரசாங்கம் நடைமுறைப்படுத்திய மேற்படி செயற்பாடுகள் தொழிலின்மையைக் குறைப்பதற்குப் போதுமானவையாக அமைந்துள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0714/ '10

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) துறைமுகங்கள் அதிகாரசபையின் தற்போதைய தலைவரின் முழுப் பெயர் மற்றும் வயது யாதென்பதையும்,

(ii) மேற்படி பதவிக்கு அவரை நியமித்த அதிகாரி யாரென்பதையும்,

(iii) மேற்படி தலைவர் இதற்கு முன்னர் சேவையாற்றிய இடம் மற்றும் பதவி யாதென்பதையும்,

(iv) அவரது கல்வித் தகைமைகளும் தொழில் தகைமைகளும் யாவையென்பதையும்,

(v) அவரது மாதச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0527/ '10

11.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை கல்வி வலயத்தின் தங்காலை கோட்டக் கல்விக் காரியாலயத்தின் கீழ் இயங்கும் ஹ/விகமுவ வித்தியாலயத்தின் ஆசிரியர்களும் மாணவர்களும் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக வலயக் கல்வி அலுவலகத்தினால் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் அண்ணளவாக 110 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர் என்பதையும்,

(ii) அனைத்து பாடங்களையும் கற்பிப்பதற்கு 05 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர் என்பதையும்,

(iii) அனைத்து வகுப்புகளையும் நடாத்துவதற்கு 50 x 20 சதுர அடி மற்றும் 40 x 20 சதுர அடி கொண்ட இரு கட்டிடங்களும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்துவதற்கென்று பழுதடைந்த நிலையுள்ள ஒரு மலசலகூடமும் மாத்திரமே உள்ளதென்பதையும்,

(iv) மின்கட்டணம் செலுத்தப்படாததனால் பாடசாலைக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு உள்ளதா என்பதையும்,

(ii) இல்லையெனில், மேற்படி வித்தியாலயத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுத்து வித்தியாலயத்தினதும் மாணவர்களினதும் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0586/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதந்திரம் அடைந்தது முதல் ஏனைய நாடுகளுக்கு காணிகளை அன்பளிப்பாக இலங்க அரசாங்கம் வழங்கியுள்ளதா என்பதையும்,

(ii) ஆம் எனில், எத்தனை பேர்ச்சுகள் அல்லது ஏக்கர்கள் வழங்கப்பட்டது என்பதையும்,

(iii) அக் காணிகளை வழங்கியமைக்கான நோக்கம் என்னவென்பதையும்,

(iv) உள்நாட்டுக் காணிகள் வழங்கப்பட்ட அத்தகைய நாடுகளிடமிருந்து அதனையொத்த காணிகளை இலங்கை பரஸ்பரம் பெற்றுக்கொண்டதா என்பதையும்

(v) ஆம் எனில், பெற்றுக்கொண்ட காணிகளின் பரப்பளவு, திகதி, நாடுகள் யாவை என்பதையும்

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட ஆறாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2010, நவெம்பர் 22) [1].

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 39ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு மற்றும் போர் வீரர் நலனோம்புகை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2005, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்" 2(2) ஆம் பந்தியை திருத்துவதற்காக 2010, ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிய 1649/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழான ஒழங்குவிதிகள்,— 1956 ஆம் அண்டின் 47 ஆம் இலக்க, பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 31 ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 20அ ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2010, ஓகத்து மாதம் 20 ஆம் திகதி 1667/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 8.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 9.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 11.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 12.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 18.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

19.

தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---